புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்ககால வேளாண் குடியின் சமூகநிலை

த.சரவணன்
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
எம். வி . எம். அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

மனிதன் பண்பாட்டு மனிதனாக வளர்நிலை கண்ட காலவளர்ச்சியைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. அதாவது விலங்கு போன்று வேட்டை வாழ்க்கை வாழ்ந்த மனிதன் உற்பத்தி உறவுகளைக் கைகொண்டதன் விளைவாகப் பொருள்சார்ப் பண்பாடு வாழ்நிலையை கைகொண்டான் என்பதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. சங்க இலக்கியம் சுட்டும் நாநிலப் பாகுபாடும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்நிலையும் பண்பாட்டுப் படிமலர்ச்சியையே காட்டுகின்றன. குறிப்பாக அவ்வவ் நிலங்களில் உள்ள பொருட்களை அங்கு வாழ்ந்த மக்கள் எவ்வாறு பயன்படுத்தினர் என்பதைக் குறிப்பிடவே நாநிலப் பாகுபாட்டுத் தன்மை சங்க அக இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. இதைத்தான் இலக்கண நூலான தொல்காப்பியம் கருப்பொருள் அமைவு என்று குறிப்பிடுகிறது. அகப்பாடல்களில் கருப்பொருள் அமைவு பண்பாட்டு நிலையின் வெளிப்பாடாகும். சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் வேட்டை வாழ்க்கைமுறை இரண்டு நிலைகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒன்று காடுகளில் விலங்குகளை வேட்டையாடி அவற்றை உணவாகக் கொள்தல்; மற்றொன்று கடலில் மீன்களைப் பிடித்து அவற்றை உணவாகக் கொள்தல். எனவே தொடக்ககால மனித வாழ்வில் வேட்டையின் மூலம் கிடைக்கும் இறைச்சியும் முக்கிய உணவாக இருந்துள்ளது. வேட்டையை அடிப்படையாகக் கொண்ட வாழ்நிலையில் காடுகளில் வேட்டையாடும் ஒரு பிரிவும், கடலில் வேட்டையாடும் ஒரு பிரிவும் என இரண்டு நிலைகளில் மட்டுமே மக்களின் பிரிவுநிலை இருந்தது. இதுவே பொருள்சார்ப் பண்பாட்டு வளர்நிலையின் அடிப்படையில் பல பிரிவுகள் வளர்நிலை கொள்வதற்கு அடிப்படையாக இருந்துள்ளது. உயிரிப் பரிணாம வளர்ச்சியால் மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபடுகின்றான். அதுபோல பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சி மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து வாழ்நிலை கொள்வதற்கு வழிவகுத்தது. பண்பாடு மக்களால் தேவைக்காக உருவாக்கப்பட்டது என்றாலும் அந்தப் பண்பாடே பல குடிகள் உருவாவதற்கு அடிப்படையாக இருந்துள்ளது. விலங்கு வேட்டையை அடிப்படைப் பண்பாடாகக் கொண்ட வேட்டுவர் குடியும், மீன் வேட்டையை அடிப்படைப் பண்பாடாகக் கொண்ட பரதவர் குடியும் உருவானதைப் போலவே வேளாண் உற்பத்தியை அடிப்படைப் பண்பாடாகக் கொண்ட வேளாண் குடியும் பண்பாட்டு வளர்நிலையில் தோற்றம் பெற்றுள்ளது. இவ்வாறு தோற்றம் பெற்றுள்ள சங்ககால வேளாண் குடியின் சமூக நிலையை அறிவதை அடிப்படை நோக்கமாக இக்கட்டுரை கொண்டுள்ளது.

## குடிகளின் தோற்றமும் வேளாண் குடியும்

உலகெங்கிலும் மனிதனின் தொடக்ககால வாழ்க்கை விலங்கு போன்று மந்தை வாழ்க்கையாகவே இருந்துள்ளது என்பதை மானிடவியல் அறிஞர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். வேட்டையின் பொருட்டுக் குழுவாகச் செயல்பட்ட ஒரு கூட்டம் மந்தை வாழ்க்கை வாழ்ந்துள்ளது. இவ்வாறே பல்வேறு குழுக்கள் வாழ்ந்துள்ளன. மந்தை வாழ்வில் இருந்த மக்கள் கட்டற்ற பாலுறவிற்குத் தடையை ஏற்படுத்திக் குடும்ப அமைப்பு முறைக்கு மாறிய போது மந்தை அமைப்புமுறை சிதைவுற்றுள்ளது. “எங்கே குடும்பம் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றதோ அங்கே மந்தைகள் அபூர்வமான விதிவிலக்குகளாக இருக்கின்றன. மறுபக்கத்தில் எங்கே சுயேட்சையான புணர்ச்சி அல்லது பலதார மணம் நிகழ்வது

விதியாக இருக்கிறதோ, அங்கே அநேகமாக இயல்பாக மந்தை சேர்கிறது. மந்தையாகச் சேர வேண்டுமென்றால், அதற்குக் குடும்ப உறவுகள் தளர்த்தப்பட்டிருக்க வேண்டும்"[1] என்பர்.

குடும்பங்கள் உருவான தொடக்க காலத்தில் இரத்த உறவுடைய குடும்பங்களே தோன்றியுள்ளன. அதாவது அண்ணனும் தங்கையும் ஒரு குழந்தைக்குப் பெற்றோராக இருந்துள்ளனர். உடன் பிறந்தவர்களுக்குப் பாலுறவுக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை. இப்படியான குடும்ப அமைப்பிலிருந்தே பாலுறவுக் கட்டுப்பாடுடைய குடும்பங்கள் தோற்றம் பெற்றன. குடும்பங்களின் வளர்நிலையில் பாலுறவுத்தடை தவிர்க்க முடியாததாக இருந்தது. அண்ணனுக்கும் தங்கைக்கும், மகனுக்கும் தாய்க்கும், தந்தைக்கும் மகளுக்கும் இடையே பாலுறவுத் தடை ஏற்படுத்தப்பட்டது. "உறவாய் தீவிலுள்ள குடும்பத்துடன் பொருந்துகின்ற அமெரிக்க இரத்த உறவு முறைப்படி சகோதரனும், சகோதரியும் ஒரு குழந்தைக்குத் தந்தையாகவும், தாயாகவும் இருக்க முடியாது. அதற்கு மாறாக உறவாய் தீவுகளின் இரத்த உறவு முறைப்படி பார்த்தால் இதுவே விதியாக இருந்த ஒரு குடும்பம் இருந்திருக்க வேண்டும்"[2] என்பர்.

இரத்த உறவுமுறைக் குடும்பங்களில் இருந்து புதிய அமைப்புடைய குடும்பங்கள் உருவாயின. குறிப்பாக ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் பாலுறவு கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. "சகோதரிகளைக் கொண்ட ஒரு குழு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்கள் குடும்பச் சமூகத்தின் மூலக்கருவாகவே அமைந்தன. அவர்களின் கூடப்பிறந்த சகோதரர்கள் இன்னொரு குடும்பச் சமூகத்துக்கு மூலக்கருவாக அமைந்தனர். மார்க்கன் 'பூனலுவா' குடும்பம் என்று அழைக்கின்ற குடும்பத்தின் வடிவம் இந்த முறையில் அல்லது இதே மாதிரியான முறையில் இரத்த உறவுக் குடும்பத்திலிருந்து வளர்ந்தது"[3] என்பர். குடும்ப வளர்நிலையில் ஒருதார மணக்குடும்பம் என்பதே இறுதி நிலையாகும். "மனித நாகரிக வளர்ச்சிப் படிநிலையில் காட்டுமிராண்டி நிலையில் குழுமணமும் அநாகரிக நிலையில் இணைக் குடும்பமும் நாகரிக நிலையில் ஒருதார மணமுறையும் இருந்தன என்கிறார் எங்கல்ஸ்"[4].

குடும்ப அமைப்பு முறையே குடிகள் தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்துள்ளது. பல குடும்பங்கள் சேர்ந்து ஒரு சமூகத்தை உருவாக்குகின்றன. பல சமூகங்கள் சேர்ந்து ஒரு சமுதாய அமைப்பை உருவாக்குகின்றன. ஒத்த பண்பாட்டின் அடிப்படையில் அல்லது தொழிலின் அடிப்படையில் செயல்படும் ஒரு அமைப்புக்கு குடி என்று பெயர். அத்தகைய பல குடிகளைச் சங்க இலக்கியம் சுட்டிக்காட்டுகிறது.

"துடியன் பாணன் பறையன் கடம்பன்என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை"

(புறம்.335 : 7-8)

என்னும் பாடல் தொழில் அடிப்படையில் அமைந்த இசைக் குடிகளைப் பற்றி குறிப்பிடுகிறது.

தமிழகத்தில் நாநிலத்திலும் பல்வேறு குடிகள் இருந்துள்ளன. "சங்ககாலத் தமிழகத்தைத் தொல்காப்பிய இலக்கண நூல் நிலவியல் அடிப்படையில் ஐவகை நிலமாகப் பாகுபடுத்தியது. அவற்றைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று வழங்கியது. ஐவகை நிலத்திலும் ஐந்து வகைப்பட்ட வாழ்க்கை நிலைகள் உருவாயின. ஐவகை நிலத்தில் வாழ்ந்த மக்கள் நிலத்தாலும், செய்த தொழிலாளும் பல குடியினராக வேறுபட்டிருந்தனர். இத்தகைய குடிச் சமூகங்களை வாழ்நிலைப் பரப்பு வழிச் சமூகங்கள் என்பர்"[5].

நாநில வளர்ச்சி என்பது பொருள்சார்ப் பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் சாத்தியப்பட்ட ஒன்றாகும். மலையும் சமவெளியுமாக இருக்கும் நிலத்தை காடு, வயல்வெளி என்று மேலும் பிரித்து அறிகின்ற பண்பு பயன்பாட்டு நிலை சார்ந்ததாகும். மனிதனின் தொடக்ககால வாழ்க்கைமுறை வேட்டை என்பதாக மட்டுமே இருந்தது. அந்த வேட்டையும் காடுகளில் விலங்குகளை வேட்டையாடுதல், கடலில் மீன்களை வேட்டையாடுதல் என்ற இரு நிலைகளில் மட்டுமே இருந்தது. அதன் பிறகே ஆயர் வாழ்வும், வேளாண் வாழ்வும் பொருளைப் பயன்படுத்தும் நிலையிலிருந்து மக்களுக்குச் சாத்தியப்பட்டன. மருதநிலம் கண்ட நன்செய் வேளாண்மையே அதிகாரத்துவம் மிக்க அரசு உருவாக வழிவகை செய்தது. "வேட்டையாடும் இனக்குழு வாழ்க்கையும், ஆடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கையும் அழிந்து தனிச் சொத்துரிமையும் அரசும் தோன்றிய வரலாற்றுக் காலம் என்பதை மானிடவியல் நோக்கோடு சங்க இலக்கியத்தைக் காண்போர் அறியலாம்"[6].

வேட்டை வாழ்வு வாழ்ந்த வேட்டுவர் குடியிலிருந்தே பல்வேறு குடிகள் தோன்றியுள்ளன. ஏனெனில் காட்டெரிப்பு வேளாண்மை செய்த கானவர் குடியும், மாடுகளைப்

பழக்கி மந்தை உருவாக்கிய ஆயர்குடியும், கழனி கண்டு நன்செய் வேளாண்மை செய்த உழவர் குடியும், மீன்களைப் பிடித்து உணக்கும் (பதப்படுத்தும்) பரதவர் குடியும் உப்பு விற்பனை செய்யும் உமணர் குடியும் எனப் பல குடிகள் பொருள் பண்பாடு சார்ந்தே உருப்பெற்றன என்றே அறியப்படுகின்றன.

தமிழகத்தில் பலகுடிகள் இருந்தன என்பதை,

"தாதின் அனையர் தணடமிழ்க் குடிகள்"

(பரி.திரட்டு.7:5)

என்னும் பாடல் சுட்டிக் காட்டுகிறது.

தமிழ்நிலப் பகுதியை நான்காகப் பிரித்து ஐந்திணை மரபை எடுத்துக் கூறும் தொல்காப்பியர் அவ்வவ் நிலங்களுக்கு உரிய மக்கள் யார் என்பது பற்றியும் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு நிலத்திலும் வாழும் குடிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்"

(தொல்.நூ.967)

என்று தொல்காப்பியர் ஒருவாறு குறிப்பிடுகிறார்.

வேட்டுவக் குடியில் இருந்து கானக் குறவர் குடியும், கள்வர் குடியும் தோன்றின. வேட்டுவரில் ஒரு பிரிவினர் வணிகர்களிடம் கொள்ளையடித்தனர் என்பதை,

"சேக்குவங் கொல்லோ நெஞ்சே சாத்தெறித்து
அதர்கூட்டுண்ணும் அணங்குடைப் பகழிக்"

(அகம்.167:7-8)

என்னும் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

வேட்டுவக் குடியைப் பற்றி ,

"கொலைவல் வேட்டுவன் வலைபரித்து போகிய"

(நற்.189:7)

என்றும்

குறவர் குடியைப் பற்றி,

"குறவர் தந்த சந்தின் ஆரமும்"

(அகம்.13:4) என்றும்

கானவர் குடியைப் பற்றி,

"கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்"

(முருகு.194)

என்றும் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

கோவலர் அல்லது ஆயர் குடியினர் ஆநிரைகளை வளர்த்ததோடு வன்புல வேளாண்மையும் செய்தனர். ஆநிரைகளைப் பாதுகாப்பதற்குக் கோவலர் பெரிய மரக்கட்டைகளை எரித்தனர் என்பதை,

"கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய
பெருமர ஒடியல் போல"

(நற். 289: 7-8)

என்னும் பாடல் சுட்டுகிறது.

உணவுத் தேவையைக் கடல் வேட்டையின் மூலம் நிவர்த்தி செய்து கொண்ட குடி பரதவர் குடியாகும். பரதவர் குடியே உப்பையும் விளைவித்தது என்பதை,

"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
……. ……. …………. …………. ……….
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்"

(அகம்.140: 1-5)

என்னும் பாடல் குறிப்பிடுகிறது.

பரதவர் வலிமை மிக்கவர் என்பதை,

"திண்திமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ"

(நற்.388:4)

என்னும் பாடல் சுட்டுகிறது.

வன்புல வேளாண்மையிலிருந்து வளர்நிலை கண்டு மென்புல வேளாண்மையைச் செய்தவர்கள் உழவர்கள் ஆவர். தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் உழவர்களை வேளாளர்கள் என்கின்றன. உழவர்களில் இருபிரிவினர் உண்டு. ஒரு பிரிவினர் உழுதுண்ணும் வேளாளர்; மற்றொரு பிரிவினர் உழுவித்துண்ணும் வேளாளர் ஆவர். "நிலக்கிழாரான உழுவித்துண்போர், நிலத்தில் ஊழியம் செய்யும் உழுவோர் என அவர்கள் இருவகையினர்; அவர்களின் முற்கூறியோர் உயர்ந்த வேளாளர் எனவும் பிறர் இழிந்த வேளாளர் எனவும் பட்டனர்"[7]. மென்புல வேளாண்மையே நீர்ப்பாசன வேளாண்மையாகும். அதாவது கழனிகளில் உள்ள அல்லது ஏரிகளில் உள்ள நீரைப் பயன்படுத்தி நெல், கரும்பு போன்ற பயிகளை வேளாண்மை செய்தலாகும். மென்புல வேளாண்மையே உபரி உற்பத்திக்கும் அரசு உருவாக்கத்திற்கும் வழிவகுத்துள்ளது.

மென்புல வேளாண்மை செய்த உழவர்கள் சேற்றுழவு செய்தனர் என்பதை,

"பகடுசேறு உதைத்த புள்ளிவெண் புறத்துச்
செஞ்சால் உழவர் கோற்புடை மதரிப்"

(நற்.340: 6-7)

என்னும் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

சங்ககாலத்தில் தொழில் அடிப்படையில் வேட்டுவர், கானவர், ஆயர், பரதவர், உமணர், உழவர், பாணர் போன்ற குடிகள் இருந்ததைப் போன்றே ஆட்சி அதிகாரம் சார்ந்தும் பலகுடிகள் இருந்துள்ளன. அக்குடிகள் மழவர், ஒளியர், அதியர், ஆவியர் குடி, ஓவியர்குடி, நாகர், கொங்கர், அழிசி குடி என்பவனாகும். இவ்வாறு பல்வேறு குடிகள் சங்ககாலத் தமிழ்நிலப் பகுதிகளில் இருந்துள்ளன.

பொருள்சார்ப் பண்பாடும் வேளாண் வளர்ச்சியும்

வேட்டை வாழ்வின் போது பொருள்சார்ப் பண்பாடு தோன்றவில்லை. குறிப்பாக தொடக்ககால வேட்டையின்போது கல் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. காட்டெரிப்பு வேளாண்மை பற்றிய அறிவுப் புலத்திற்குள் சென்ற பிறகே மனித வாழ்வியல் வளர்ச்சியடைந்தது. அதாவது அதுவரை இருந்த விலங்கு வாழ்க்கை முறையைக் கடந்து மனித வாழ்க்கை முறைக்குள் மனிதன் புகுந்தான். காட்டெரிப்பு வேளாண்மை மனிதனுக்குப் பொருள் நுகர்வு மனநிலையை உருவாக்கியது. இங்கிருந்தே எரித்தல் பண்பாடு அல்லது தீயைப் பயன்படுத்துதல் என்ற பயன்பாட்டுமுறை மனிதனால் கைகொள்ளப்பட்டது. காட்டெரிப்பு வேளாண்மையின் வளர்நிலையில் இருந்தே மென்புல வேளாண்மைக்கான அறிவுமுறை கிடைத்தது. அதாவது இக்காலத்தில்தான் தானியங்களைத் தக்ககாலம் பார்த்து (பட்டம் பார்த்து) விதைத்து அறுவடை செய்யும் தொழில்நுட்பம் மனிதனுக்கு கைவரப்பெற்றது. நீர்ப்பாசன வேளாண்மையின் காரணமாகவே குளம் வெட்டுதல், நீரை தேக்கி வைத்தல், நீரை வயல்களில் பாய்ச்சுதல், ஏர் கொண்டு நிலத்தை உழுதல், நாற்றுநடுதல், களையெடுத்தல், பயிர் பாதுகாப்பு, அறுவடை செய்தல், உபரியை சேகரித்து வைத்தல், விதை நெல்லைப் பாதுகாத்து வைத்தல், மட்கலன்களை உருவாக்குதல் போன்ற பொருள்சார்ப் பண்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதைப்போன்றே இக்காலத்தில் கருத்தியல்சார்ப் பண்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

நிலத்தின் பக்குவம் அறிந்து உழவன் நிலத்தை உழுதான் என்பதை,

"ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போல"

(குறுந்.131: 4-5)

என்னும் பாடல் காட்டுகிறது.

கழனி பற்றிய குறிப்பு,

"அள்ளலங் கழனி உள்வாய் ஓடிப்"

(நற்.340: 5)

என்னும் பாடலில் இடம்பெற்றுள்ளது.

உழவன் எருமைகளைப் பழக்கி அவற்றை உழவுக்குப் பயன்படுத்தினான் என்பதை,

"பெருநற் பல்கூட்டு எருமை உழவ"

(நற்.60:2)

என்னும் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு வேளாண் வளர்ச்சியின் காரணமாகப் பல்வேறு பொருள்சார்ப் பண்பாடுகள் உருவாயின.

வேளாண் குடியின் பொருளாதாரநிலை

மென்புல (மருதநில) வேளாண்மையே பொருளாதார வளர்ச்சியின் நிலைக்களன் ஆகும். ஏனெனில் இங்குதான் உபரிப் பண்பாடு வளர்நிலை கண்டது. அத்தோடு செமித்து வைக்கப்பட்ட தானியங்களைக் காவல் காக்கின்ற காவல் முறையும், நிர்வாக முறையும் மென்புல வேளாளர்களால் உருவாக்கப்பட்டன. அதாவது பொதுவுடைமையாக இருந்த பொருளாதாரம் தனியுடைமையாக்கப்பட்டது.

"வரகுகடன் இரக்கும் நெடுந்தகை
அரசுவரின் தாங்கும் வல்லாளன்னே"

(புறம்.327: 7-8)

என்று இருந்த வாழ்வியல் முறை

"அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிது நந்தும்"

(புறம்.184: 5-6)

என்ற வாழ்வியல் முறைக்குச் சென்றது. வேளாண் பொருளாதாரம் அரசனின் ஆளுகைக்கு உட்பட்ட பொருளாதாரமாக மாற்றி அமைக்கப்பட்டது. அறுவடை செய்யப்பட்ட வேளாண் பொருள்களின் ஒரு பகுதி அரசனுக்கு செல்ல வேண்டும் என்ற பொருளியல் சூழல் அரசனால் ஏற்படுத்தப்பட்டது. "ஒரு பண்பாட்டைப் பற்றிய புரிதலென்பது அதன் பொருளாதார முறையைப் புரிந்து கொள்வதையும் உள்ளடக்கியே அமைகிறது எனலாம்"[5] என்பர்.

உப்பு வணிக வளர்ச்சியின் காரணமாகப் பண்டமாற்றுப் பொருளாதாரம் நிலை கொண்டது. சங்ககால மக்கள் உப்புக்கு நெல்லைப் பண்டமாற்று செய்த முறையைப் பற்றிச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இங்கிருந்தே வணிகப் பொருளாதாரம் அரசின் மையப் பொருளாதாரமாக மாற்றப்பட்டது. அதாவது பொருட்களை விற்க வரி வசூல் செய்யப்பட்டது. இதனைப் பற்றிப் பட்டினப்பாலை,

"வைகல் தொறும் அசைவு இன்றி
உல்கு செயக் குறைபடாது"

(பட்டின.124-125)

என்று குறிப்பிடுகிறது.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் உற்பத்தி உறவுகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதன் அடிப்படையில் வேளாண் பொருளாதாரம் பொருளாதார வளர்ச்சியில் இன்றியமையாததாக இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. இதனால்தான் வள்ளுவர் ஏர்த் தொழில் பற்றிக் கூறும் போது,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (குறள்.1031)

என்று கூறுகிறார்.

வேளாண் குடியின் அரசியல் நிலை

மருதநில வேளாண்மையை மையமாகக் கொண்டே அரசு உருவாக்கம் நடைபெற்றுள்ளது. அரசன் அரசின் தலைவனாகவும் குடிகள் அவனைச் செயல்படச் செய்பவர்களாகவும் இருந்துள்ளனர். அதனாலேயே,

"நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர்அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

(புறம்.186: 1-2)

என்று அரசன் மக்களால் கொண்டாடப்பட்டான். தலைமைத்துவமும் அரசியல் நிர்வாகமும் வலிமையான அரசு அமைவதற்குக் காரணமாக இருந்துள்ளன. அதனால் தான் அவ்வையார்,

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

(புறம்.187: 3-4)

என்று குறிப்பிடுகிறார்.

அரசு உருவாக்கத்தில் வேளாண் மக்களின் அரசியல் செயல்பாடு முக்கியப் பங்காற்றியுள்ளது என்பதைச் சங்க இலக்கியம் எடுத்துக்காட்டுகிறது.

வேளாண் குடியின் திருமண நிலை

நெல் பண்பாடு வேளாண் மக்களின் முக்கியப் பண்பாடாகும். "மருதநிலப் பண்பாட்டை, மருதநில வேளாண்மைச் சமுதாயத்தை, நிலவுடைமைச் சிந்தனை மரபின் ஆதிக்கத்தைத் தோற்றுவித்தலில் நெல் என்ற உயர்ந்த சமூக அங்கீகாரம் பெற்ற பொருள்சார் உற்பத்திச் சிந்தனை முக்கியப் பங்கு வகிக்கிறது"[9]. நெல்லைப் புனிதப் பொருளாகக் கொண்ட மருதநில மக்கள் அதைத் திருமணத்தின் போது பயன்படுத்தி வாழ்த்தியுள்ளனர்.

திருமணத்தின் போது மக்கள் நீரையும் நெல்லையும் சொரிந்து மணமக்களை வாழ்த்தினர் என்பதை,

"நீரொடு சொரிந்த ஈரிஇதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மனம் கழிந்த பின்றைக்"

(அகம்.86: 15-17)

என்னும் பாடல் சுட்டுகிறது.

திருமணத்தின்போது இசைவாணர்கள் மணவொலி எழுப்பினர் என்பதை,

"படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ்"

(அகம்.136:7)

என்னும் பாடல் காட்டுகிறது.

முடிவுரை

மனிதகூட்டம் வேளாண் சமூகமாக ஒருங்கிணைவதற்குப் பல்வேறு பண்பாட்டுப் படிமலச்சிகள் நடந்தேறியுள்ளன. மனித சிந்தனையின் வழிப்பட்ட முன்னெடுப்புகள் ஒருங்கிணைப்பாக மாறியதோடு குடும்பவாழ்க்கை முறைக்கு இட்டுச் சென்றன. குடும்பஅமைப்பே வேளாண்மையை மையமிட்ட சமூக அமைப்பு உருவாவதற்கு அடிப்படையாக இருந்துள்ளது. பயிற்சியும் முன்னெடுப்பும் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையான தொழில்நுட்பத்தை மனிதனுக்கு அளித்துள்ளன. இயற்கையான பயிர் விளைச்சலைப் பயன்படுத்திய மனிதன் காட்டெரிப்பு வேளாண்மை மூலம் வேளாண்மையைக் கற்றுக் கொண்டான் என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. காட்டெரிப்பு வேளாண்மை அறிவு அவனைப் பாசன வேளாண்மைக்கு (மருதம்) இட்டுச் சென்றது. பாசன வேளாண்மையின் மூலம் பல பொருள்சார்ப் பண்பாடுகள் உருவாகின. அத்தோடு பாசன வேளாண்மையே அரசு உருவாக்கத்திற்கும் பொருளாதார வளர்நிலைக்கும் வழிவகுத்தன என்பதைச் சங்கப் பாடல்கள் பகர்கின்றன. வேளாண்மை வளர்ச்சியே சங்க காலத்தில் பொருளாதாரச் சமநிலையை ஏற்படுத்தியது. அதாவது சேமிப்பும், பாதுகாப்பும் வேளாண்மைச் சமூகத்தின் அடிப்படைப் பண்பாக்கப்பட்டன. வேளாண் மக்களிலிருந்தே அரசனுக்கு உதவும் படைகள் உருவாக்கப்பட்டன. மேம்பட்ட சமுதாயம் அமைவதற்கும் வாழ்வியல் நடைமுறைகள் கட்டுக்கோப்பாக இருப்பதற்கும் அரசு நிறுவனம் மக்களுக்குத் துணையாக இருந்தது. ஒழுங்குபடுத்தப்பட்ட திருமண முறையால் சமூகச் சமநிலை ஏற்பட்டது. மனித சமுதாயத்தின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில் வேளாண் சமூகத்தின் செயல்பாடு முக்கியப் பங்காற்றியுள்ளதைச் சங்க இலக்கியம் எடுத்துக்காட்டுகிறது.

குறிப்புக்கள்

1.நா. தர்மராஜன் (மொ.ஆ) எங்கல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.9.

2.மேலது, ப.28.

3.மேலது, ப.34.

4.பெ. மாதையன், சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.52.

5.அநுமந்தன் (ப.ஆ)., தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம் (வாழ்வியல்), ப.4.

*6.பெ. மாதையன், சங்ககால , இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், ப.123.*
*7.ந.சுப்பிரமணியன், சங்ககால வாழ்வியல், ப.300.*
*8.பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், ப.304.*
*9.செ.சாரதாம்பாள் (க.ஆ) இலக்கியமும் பிறதுறைகளும், தொகுதி -2, மானிடவியல் நோக்கில் நெல் (க) ப.1064.*


*பார்வைநூல்கள்*

*முதன்மை நூல்கள்*

*1.செயபால்.இரா(உ.ஆ)., சங்கஇலக்கியம் அகநானூறு, புத்தகம்1, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600098, மூன்றாம் பதிப்பு – 2007.*

*2.நாகராசன்.வி(உ.ஆ)., சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, பகுதி – 2 , நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600098, மூன்றாம் பதிப்பு – 2007.*

*3.நாகராசன்.வி(உ.ஆ)., சங்க இலக்கியம் குறுந்தொகை, பகுதி – 1, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600098, மூன்றாம் பதிப்பு – 2007.*

*4.பாலசுப்பிரமணியன்.கு.வெ.(உ.ஆ)., சங்க இலக்கியம் நற்றிணை, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600098, மூன்றாம் பதிப்பு – 2007.5. பாலசுப்பிரமணியன்.கு.வெ.(உ.ஆ)., சங்க இலக்கியம் புறநானூறு, புத்தகம் 1,2, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600098, மூன்றாம் பதிப்பு – 2007.*

*6. சோமசுந்தரனார்.பொ.வே.(உ.ஆ)., பரிபாடல், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை – 1, பதிப்பு – 2007.*

*துணைமை நூல்கள்*

*1.அநுமந்தன்(ப.ஆ)., தமிழ்நாட்டு வரலாறு– சங்ககாலம் (வாழ்வியல்) தமிழ்ப் பாடநூல் நிறுவனம், சென்னை, பதிப்பு –1923.*

*2.சுப்பிரமணியன்.ந, சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – 600098, இரண்டாம் பதிப்பு – 2010.*

*3.தர்மராஜன்.நா(மொ.ஆ)., எங்கல்ஸ் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், கருத்து = பட்டறை, மதுரை – 6, முதல் பதிப்பு – 2006.*

*4.நெடுஞ்செழியன்.இரா(உ.ஆ)., திருக்குறள், நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை வெளியீடு, சென்னை – 18, மூன்றாம் பதிப்பு – 2012.*

*5.பத்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், வல்லினம் பதிப்பகம், புதுவை, முதல் பதிப்பு – 2005.*

*6.மணிவாசகம்.க(ப.ஆ)., இலக்கியமும் பிறதுறைகளும், தொகுதி – 2, தமிழ் ஆய்வாளர் மன்றம், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21, முதல் பதிப்பு – 2013.*

*7.மாதையன்.பெ, சங்க இலக்கியத்தில் குடும்பம், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – 600098, முதல் பதிப்பு – 2010.*

*8.மாதையன்.பெ, சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதல் பதிப்பு - 2004.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********